பக்கங்கள்:-20

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | மார்கழி 04 | புதன்கிழமை | 20.12.2023 | அதிர்வு 141

**யாழில் பொலிஸார் அதிரடி**

## 3 நாள்களில் 70 பேர் கைது

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் கடந்த 3 நாள்கள் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையில் போதைப்பொருள்

06

# இலங்கைக் கடற்பரப்பில் ஆய்வு மேற்கொள்ள வெளிநாட்டுக் கப்பல்களுக்கு அனுமதி இல்லை

## ரணில் அரசு திடீர் அறிவிப்பு; சீனா கடும் அதிருப்தி



இலங்கைக் கடற்பரப்புக்குள் ஆய்வுகளை மேற்கொள்ள எந்தவொரு நாட்டின் கப்பலுக்கும் அனுமதி வழங்காதிருக்க இலங்கை அரசு தீர்மானித்துள்ளது. இந்தத் தடை ஒரு வருட காலத்துக்குச்

06

# ஜனாதிபதித் தேர்தலில் ரணில் வரலாற்றுச் சாதனை படைப்பார்

## நூறு இலட்சம் வாக்குகளைப் பெறுவார் என்று ஐக்கிய தேசியக் கட்சி நம்பிக்கை

"அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க, வரலாற்றில் வேறு எந்த ஜனாதிபதியும் பெற்றுக்கொள்ளாத வாக்குகளைவிட நூறு இலட்சம் (ஒரு கோடி) வாக்குளைப் பெற்று மீண்டும் ஜனாதிபதி ஆசனத்தில் அமருவார். அதில் எந்தச் சந்தேகமும் இல்லை. இதனை நான் நகைச்சுவைக்காகத் தெரிவிக்கவில்லை."

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

04



# மோட்டார் சைக்கிளுடன் ரயில் மோதி ஒருவர் பலி

**கிளிநொச்சியில் சோகம்**

கிளிநொச்சியில் மோட்டார் சைக்கிளுடன் ரயில் மோதி விபத்துக்குள்ளானதில் ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி, ஆனந்தபுரம் பகுதியில் உள்ள ரயில் கடவையை மோட்டார் சைக்கிளில் கடக்க முயன்றவர் மீது ரயில் மோதியுள்ளது.

04






சிறுவர் மற்றும் சிறுமியர் பாலியல் ரீதியில் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்படும் கொடூரம் நாட்டில் தீவிரமடைந்திருப்பதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்திருக்கின்றது.

மேஜர் ஆகாத சிறுமிகள், பருவ வயதைத் தாண்ட முன்னரே கர்ப்பிணிகளாகும் துரதிஷ்டம் பெரும் சவாலாக உருவெடுத்து வருவதாக மேற்படி அதிகார சபையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர்

06

# யாழில் டெங்கு நுளம்பு உற்பத்தி மையங்கள்!

## பல்கலை., போதனா வைத்தியசாலை யாழ். இந்து, இந்து மகளிர் கல்லூரிகள்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.20

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், யாழ். போதனா வைத்தியசாலை, பாடசாலைகளில் யாழ். இந்துக் கல்லூரி மற்றும் யாழ். இந்து மகளிர் கல்லூரிப் பகுதிகளில் மிக அதிக டெங்கு நுளம்பு பெருக்கம் காணப்படுவதாக வடக்கு சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

போதனா வைத்தியசாலையில் 19 இடங்களிலும், யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் 29 இற்கும் அதிக மான இடங்களிலும், யாழ்ப்பாணம் இந்து கல்லூரியில் 6 இடங்களிலும், யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் 17 இடங்களிலும் நுளம்புப் பெருக்க இடங்கள் காணப்டுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இதேபோன்று மேலும் பல பாடசாலைகளிலும் காணப்படுவதோடு அரச திணைக்களங்கள் உட்பட்ட இடங்களிலும் அதிகமாக டெங்கு நுளம்புப் பெருக்கம் காணப்படுவதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

இதேநேரம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் நேற்றைய தினம் ஒரேநாளில் 110 பேருக்கு டெங்குத் தொற்று ஏற்பட்டிருப்பதாகவும் இதனால் நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்த உடனடியாகத் துரித நடவடிக்கை எடுங்குமாறும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த 3 நாள்களாக கொழும்பில் இருந்து வந்த விசேட அணியினர் யாழ்.நகரில் மேற்கொண்ட ஆய்வு நடவடிக்கையின்போதே இவை கண்டறியப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது.

# பாலியாற்று குடிதண்ணீர் வழங்கல் திட்டத்தை ஜனவரியில் ஆரம்பித்து வைப்பார் ஜனாதிபதி

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு




(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசம்பர்.20

வடக்குக்கான பாலியாற்று பாரிய குடிதண்ணீர் வழங்கல் திட்டம் எதிர்வரும் ஜனவரி 4, 5, 6 ஆம் திகதிகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வடக்குக்கான விஜயத்தின் போது ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வடக்கு மக்களின் நீண்டகால குடிதண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு பாலியாற்று நீர் வழங்கல் திட்டத்தை முன்னெடுக்கும் முக்கிய கலந்துரையாடல் கடற்றொழில் அமைச்சரும் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், யாழ். மாவட்ட அரச அதிபர் அ.சிவபாலசுந்தரன், நீர்ப்பாசன நீர்வழங்கல் முகாமையாளர்கள் மற்றும் துறைசார் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் என்.சுதாகரன் பாலியாற்று குடிதண்ணீர் திட்டம் தொடர்பாக விரிவாக எடுத்துரைத்தார்.

இந்தத் திட்டம் தொடர்பில் கடந்த காலங்களில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அது கைகூடாத நிலையில் கடந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டிருந்த நிலையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட முயற்சியின் பலனாக அமைச்சரவை இந்தத் திட்டத்துக்கு 25 கோடி ரூபாவை ஒதுக்குவதற்கான அங்கீகாரம் கிடைத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.



# கடற்றொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு நேற்று விசேட நல நிதி கொடுப்பனவுகள்

சர்வதேச கடற்றொழிலாளர் தினத்தை முன்னிட்டு கடற்றொழில் அமைச்சினால் கடற்றொழிலாளர் களின் பிள்ளைகளுக்கு விசேட நல நிதி கொடுப்பனவுகள்

வழங்கும் நிகழ்வு யாழ் மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

நடந்து முடிந்த தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற கடற்றொழிலாளர்களின் பிள்ளை களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பன வும் தொடர்ச்சியாக சித்தியடைந்த மாணவர்களின் பெற்றோர்களுக்கு உலர் உணவு பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்பொழுது கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடற் றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த, மாவட்ட செயலர் அ.சிவ பாலசுந்தரன், கடற்றொழில் அமைச் சின் செயலாளர், கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் உயரதிகாரி கள், கடற்றொழிலாளர்கள், மாணவர் கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.











## ஜனாதிபதித் தேர்தலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியல்வாதி என்பதற்கு அப்பால் அவர் ஒரு பொருளாதார நிபுணர். அதனால் அடுத்த வருடம் ஏப்ரல் மாதமாகும் போது பொருளாதார ரீதியில் நாட்டை எந்த இடத்துக்குக் கொண்டுவர வேண்டும் என்ற தெளிவான இலக்கை நோக்கியே தற்போது அவர் பயணிக்கின்றார். அதனால் ரணில் விக்கிரமசிங்க மீதான நம்பிக்கை மக்கள் மத்தியில் அதிகரித்து வருகின்றது.

வங்குராத்து நிலையில் இருந்த நாட்டைக் குறுகிய காலத்தில் அதில் இருந்து மீட்பதற்கு ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்திருக்கின்றார். அதே போன்று கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் நாடு எந்த நிலையில் இருந்தது என்பதை மக்கள் இலகுவில் மறந்துவிட மாட்டார்கள்.

மக்கள் சுதந்திரமாகச் செயற்பட ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்து வரும் வேலைத்திட்டமே காரணம். நாடு வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டாலும் பொருளாதார நெருக்கடியில் இருந்து இன்னும் முழுமையாக மீளவில்லை. படிப்படியாகவே அதனை மேற்கொள்ள வேண்டி இருக்கின்றது.

அத்துடன் அடுத்த வருடம் நாட்டில் முக்கியமான இரண்டு தேர்தல்கள் இடம் பெறவுள்ளன. அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தலே முதலில் இடம் பெறவுள்ளது.

அதனால் நாட்டின் தற்போதைய பொரு ளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண ஜனாதிபதி ரணில விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்து வரும் நிலையில், ஜனாதிபதித் தேர்தலில் அவர், வரலாற்றில் வேறு எந்த ஜனாதிபதியும் பெற்றுக்கொள்ளாத வாக்குகளைவிட நூறு இலட்சம் வாக்குகளைப் பெற்று ஜனாதிபதி ஆசனத்தில் மீண்டும் அமருவார் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. இதனை நான் நகைச்சுவைக்காகத் தெரிவிக்கவில்லை. நாட்டைக் கட்டியெழுப்ப ரணில் விக்கிரமசிங்க முன்னெடுக்கும் தெளிவான திட்டத்தை அடிப்படையாகக்கொண்டே இதனைத் தெரிவிக்கின்றேன்.

அத்துடன் தற்போது நாடாளுமன்றத்தில் இருக்கும் எதிர்க்கட்சியும் எங்களுடையது. அதேநேரம் ஜனநாயக முறையில் செயற்படுவதற்கு மக்களால் தெரிவு செய்யப்படும் எதிர்க்கட்சியையும் நாங்கள் பாதுகாக்க வேண்டும். ஜனாதிபதி வேட்பாளர்கள் எனத் தற்போது பலரும் அறிவித்து வந்தாலும் இறுதி நேரத்தில் அனைத்து அரசியல் கட்சிகளும் ஒரு இடத்துக்கு வரும்." – என்றார்.

## மோட்டார் சைக்கிளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த விபத்து நேற்று மாலை இடம் பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்தவரைக் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது அவர் முன்னதாகவே உயிரிழந்துள்ளார்.

இறந்தவரின் சடலம் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப் பட்டுள்ளது.

விபத்து தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


## இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம்
## இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம்
## இணைந்து



"தாயகஒலி" பிரதம ஆசிரியர்

*தம்பு சிவா அவர்களின் (தம்பு.சிவசுப்பிரமணியம்)*

(அகவை 80) அமுத விழாவை முன்னிட்டு

நடத்தும்

## சிறுகதைப் போட்டி

இருபிரிவுகளாக நடத்தப்படும்

(பரிசுத் தொகை 1 இலட்சம்)

1. சிறுகதைப் போட்டி சகலருக்குமானது
2. பாடசாலை மாணவர்களுக்கான திறந்த போட்டி

* போட்டிக்கான படைப்புகள் அனைத்தும் சொந்தப்படைப்பாக அமைய வேண்டும். ஏற்கனவே வெளிவந்தபடைப்புக்கள் ஏற்றுக்கொள்ள படமாட்டாது.

* பாடசாலை மாணவர்களுக்கான ஆக்கப்படைப்புகள் யாவும் அப் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

* 2024ம் ஆண்டு பெப்ரவரி 15ஆம் (15.02.2024) திகதிக்கு முன் படைப்புகளை அனுப்பி வைக்க வேண்டப்படுகின்றீர்கள்.

* **நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.**

*அனுப்ப வேண்டிய முகவரி :*
இணைப்பாளர்
இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம்
இல. 9 - 2/1 நெல்சன் பிளேஸ்
கொழும்பு 06.
தொடர்புகளுக்கு 0771 877 999, 011 2364124

# மன்னாரில் சிக்கிய ஜெலற்றீன் குச்சிகள்



(ந.லோகதயாளன்)

மன்னார் மாவட்டத்தில் நேற்று அதிக ஜெலற்றீன் குச்சிகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடல் வழியே கடத்தி வரப்பட்டன என்று நம்பப்படும் 520 ஜெலற்றீன் குச்சிகள், 9 றோல் வயர்கள் என்பவற்றுடன் 354 டிக்னேற்றர்களும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட பொருள்களை உடமையில் வைத்திருந்த மன்னார், சின்னப்பண்டிவிருச்சானைச் சேர்ந்த 48 வயதுடைய ஒருவரையும் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

# கற்பிட்டி விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

(ரஸீன் ரஸ்மின்)

கற்பிட்டி – ஏத்தாளை பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்துச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கற்பிட்டி – பாலக்குடா , கரடிப்பானி வத்தையைச் சேர்ந்த தெஹிவலகே ஜானக ஏரங்க கொஸ்தா (வயது 37) எனும் குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தலவில பகுதியில் இருந்து நுரைச்சோலை பொருளாதார மத்திய நிலையத்திற்கு மரக்கறிகளை ஏற்றிச் சென்று கொண்டிருந்த லொறியுடன் மோட்டார் சைக்கிள் ஒன்று பின்னால் சென்று மோதியதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, பலத்த காயத்துக்குள்ளான மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற நபரை அங்கிருந்தவர்கள் உடனடியாக வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்தபோதிலும், அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் , உயிரிழந்த நபரின் சடலம் புத்தளம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டு, பிரதேச பரிசோதனை மற்றும் மரண விசாரணை என்பன இடம்பெற்றன.

புத்தளம் பகுதிக்குப் பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி பதுர்தீன் முஹம்மது ஹிஸாம் மரண விசாரணையை நடத்தினார்.

வீதி விபத்தால் தலையில் ஏற்பட்ட பலத்த காயம் காரணமாக இந்த மரணம் சம்பவித்துள்ளது எனத் தீர்ப்பு வழங்கி சடலத்தை குடும்பத்தினரிடம் அவர் ஒப்படைத்தார்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக கற்பிட்டி பொலிஸார்மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.






## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உதயகுமார அமரசிங்க ஊடகங்களிடம் தெரிவித்திருக்கின்றார்.

இவ்வாறு கடந்த மாதத்தில் மட்டும் பத்துச் சிறுமியர்கள் கர்ப்பிணிகளாகி இருக்கின்றமை தெரிய வந்துள்ளது என்றும் –

இவ்வாண்டில் கடந்த 11 மாதங்களில் மட்டும் இப்படி சிறுமியர்கள் என்ற பராயத்தை தாண்டாத இரண்டாயிரம் பேர் கர்ப்பிணித் தாய்மார்களாகி இருக்கின்றனர் என்றும் –

அவர் வெளியிடும் புள்ளிவிவரங்கள் அதிர்ச்சி தருவனவாக உள்ளன.

தவிரவும், சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகும் சம்பவங்களும் தாராளமாக இடம்பெற்று வருகின்றன என்கிறார் அவர்.

வக்கிர புத்தி நாட்டை ஆட்டிப்படைக்கத் தொடங்கி விட்டமையை உறுதிப்படுத்தும் புள்ளி விவரங்கள்தான் இவை .

\+ + +

கடந்த மாவீரர் தினத்தன்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனின் மகள் துவாரகா தோன்றி மாவீரர் தின உரையை நிகழ்த்துவார் என்றதும், செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி துவாரகா உருவாக்கப்பட்டு, அவரின் உரை ஒளிபரப்பாகப் போகின்றது என்று பல மட்டங்களில் ஊகச் செய்திகள் அடிபட்டன. அந்த விவகாரமே பின்னர் அடிபட்டு போய்விட்டது.

ஆனால் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி, குளோனிங் முறையில் உருவ அமைப்பைத்திரையில்உருவாக்கி, பரபரப்பு அரசியல் பேச்சை வெளிப்படுத்தும் – மக்கள் வரவேற்பு பெற்ற – நடவடிக்கை இப்போது பாகிஸ்தானில் கட்ட விழ்ந்திருக்கின்றது.

பாகிஸ்தானில் இன்னும் சரியாக 50 நாள்களில் – பெப்ரவரி 8ஆம் திகதி – பொதுத் தேர்தல்.

அங்கு, கடந்த ஆண்டு வரை மக்கள் செல்வாக்கு மிக்க பிரதமராக இருந்த முன்னாள் கிரிக்கெட் வீரர் இம்ரான் கான், நாடாளுமன்றத்தில் நடந்த குதிரைப் பேரத்தினால் பெரும்பான்மையை இழந்து, பிரதமர் பதவியைப் பறிகொடுத்த சூழலில், கடந்த ஓகஸ்டில் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவரைச் சிறையில் வைத்துக்கொண்டு, அவருக்கு இடமே அளிக்காமல், பொதுத் தேர்தலை நடத்த இப்போதைய ஆட்சித் தரப்பு முழுமூச்சாக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றது.

சிறையில் இருக்கும் இம்ரான் கான் தன்னைச் சந்திக்க வரும் சட்டத்தரணிகள் மூலம் எழுத்தில் தமது அரசியல் பேச்சுக் கருத்துக்கள் அடங்கிய குறிப்புகளை 'லீக்' செய்திருக்கின்றார் என்று கூறப்படுகின்றது. அவற்றை இம்ரான் கானே உரையாக நிகழ்த்துவது போல செயற்கை நுண்ணறிவு மூலம் அவரது குரலுக்கு மாற்றி, குளோனிங் வாயிலாக திரையில் அவர் பேசுவது போல வடிவமைத்து, அவரது பி.ரி.ஐ. கட்சி பிரசாரக் கூட்டங்களில் பயன்படுத்துகின்றது. சமூக ஊடகங்களிலும் அந்த உரைகள் சக்கை போடு போடுகின்றன. பாகிஸ்தான் தேர்தலில் இம்ரான் கானின் கட்சிக்கு பெரும் பக்கபலமாக இந்த செயற்கை நுண்ணறிவு உரைகள் அமைந்திருக்கின்றன எனக் கூறப்படுகின்றது.

## 3 நாள்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பாவனையாளர்கள் எனச் சந்தேகிக்கப்படும் 70 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டநபர்களைமருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்திய பொலிஸார், வைத்திய அறிக்கை கிடைக்கப் பெற்றதும் அவர்களை நீதிமன்றங்களில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனை அதிகமாகக் காணப்படுவதாக இனம் காணப்பட்ட பிரதேசங்களில் விசேட நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டனர்.

அதன்போது, போதைப்பொருள் பாவனையாளர்கள், போதைப்பொருள்களை உடைமையில் வைத்திருந்தார்கள் எனும் குற்றச்சாட்டில், யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் 70 பேர் வரையில் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களைத் தத்தமது பிரிவுக்கு உட்பட்ட சட்ட வைத்திய அதிகாரி முன் முன்னிலைப்படுத்தி மருத்துவ பரிசோதனைக்குப் பொலிஸார் உட்படுத்தினர்.

மருத்துவ பரிசோதனை அறிக்கைகள் கிடைக்கப் பெற்ற பின்னர், தத்தமது பொலிஸ் பிரிவுக்குரிய நீதிமன்றங்களில் அவர்களை முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை, எதிர்வரும் நாள்களிலும் இந்த விசேட நடவடிக்கைகள் தொடரும் என்றும், போதைப்பொருள் வியாபாரிகள் சிலரை அடையாளம் கண்டுள்ள நிலையில் அவர்களைக் கைது செய்வதற்குரிய நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் என்றும் பொலிஸார் மேலும் கூறினர்..

## இலங்கைக் கடற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செல்லுபடியாகும் என்று வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கைக் கடற்பரப்புக்குள் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கில் கப்பல்கள் பிரவேசிக்க முடியாத போதிலும், சேவைகள் மற்றும் வசதிகளைப் பெற்றுக்கொள்ள இலங்கைத் துறைமுகங்களுக்கு வருகை தர முடியும் என்றும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

மற்றுமொரு விசேட ஆய்வுக் கப்பலை ஈடுபடுத்தி இலங்கைக் கடற்பரப்பின் விசேட பொருளாதார வலயத்தை ஆராய்வதற்கு சீனா, இலங்கையிடம் அனுமதி கோரியுள்ள பின்புலத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இம்முறை ஆய்வுகளுக்கு "ஷியாங் யாங் ஹோங் 03" எனும் கப்பல் பயன்படுத்தப்படவிருந்தது.

இந்த ஆய்வு அடுத்த ஆண்டு ஜனவரி 5 ஆம் திகதி முதல் பெப்ரவரி 20 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படும் என்று சீனத் தூதரகம் எழுத்து மூலமாக அறிவித்திருந்தது.

இந்நிலையில், இலங்கை அரசின் மேற்படி அறிவிப்பால் சீனத் தூதரகம் கடும் அதிருப்தியடைந்துள்ளது என்று அறியமுடிகின்றது.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## புலம்பெயர் மக்களைக் கவர.....!

கொழும்பு ஆட்சியாளர்களுக்கு சற்று ஞானம் - அறிவு - பிறக்கத் தொடங்கி இருக்கின்றது என்றே தோன்றுகின்றது.

எனினும், யதார்த்தப் புறச் சூழ்நிலைகளை உணர்ந்து, புரிந்து கொண்டு, உண்மைகளை ஏற்று ஒப்புக்கொண்டு, செயல்படும் நன்னோக்கு அவர்கள் மத்தியில் இன்னும் முழுமையாக உருவாகவில்லை என்பதையும்கூறவேண்டியுள்ளது. பேரினவாத வெறிச் சிந்தனை போக்கை மீறி, வெளியே வந்து, உண்மையை உணர்ந்து கொள்ளும் பக்குவம் தென்னிலங்கைக்கு வருமா என்பது சந்தேகம்தான்.

நாட்டின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி சில யதார்த்த நிலைகளை வெளிப்படையாக பேசியிருக்கின்றார். அவர் சிறுபான்மையினரான முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர். பேரினவாத அரசுக்குள் சிக்கிக் கிடந்தாலும், அந்த மேலாண்மை எண்ணப் போக்கில் மூழ்கியவர் அல்லர் அவர். அதனால் சில கருத்துக்களை ஆட்சியாளர்களினின்றும் வேறுபட்டு, தாராளவாதப் போக்கில் அவர் முன்வைக்கின்றார்.

“அபிவிருத்திக்கான பயணத்திற்கு புலம்பெயர்ந்தவர்களையும் இணைத்து, அவர்களுடன் வினைத்திறனாக செயற்பட வேண்டியது அவசியம். புலம்பெயர்ந்தவர்களை மீள நாட்டுக்கு வரவழைப்பதற்கான சூழலை உருவாக்க வேண்டும். நாட்டின் அரசமைப்புக்கு அமைவாக அவர்களுக்கான கௌரவம், உரிமைகள் தொடர்பான புரிதலை ஏற்படுத்த வேண்டியதும் அவசியமாகும். அதற்கான சிறந்த முயற்சிகளாக நட்டஈடு வழங்குதல், காணாமல் போனோரைத் தேடுதல் மற்றும் வழக்குத் தொடுத்தல் போன்ற இயலுமைகளுடன் கூடிய குறிப்பிடத்தக்க அளவு அதிகாரம் கொண்ட உண்மையைக் கண்டறிதல் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவை நிறுவுவதற்கான சட்டமூலமொன்று கொண்டுவரப்படவுள்ளது.”

- என்று அமைச்சர் அலி சப்ரி கூறியிருக்கிறார்.

இது விடயத்தில் அவர் யதார்த்த நிலைமைகளை வெளிப்படையாகப் பேசியிருக்கின்றார் என்று கூற முடியாது. மாறாக, மென்று விழுங்கி, விவகாரத்தை அவர் சமாளித்திருக்கின்றார். அவ்வளவே.

வெளிவிவகார அமைச்சர் இக்கருத்துக்களை வெளியிட்ட அதே கூட்டத்தில், மூன்று மில்லியன் இலங்கையர்கள் வெளிநாடுகளில் இருக்கின்றமையோடு, இந்நாட்டின் பொருளாதாரத்துக்கு அவர்கள் ஆற்றக்கூடிய பங்களிப்பு எத்தகையது என்பதும் விலாவாரியாக விளக்கப்பட்டிருக்கின்றது.

இந்தப்புலம்பெயர்எண்ணிக்கையில் சரி அரை வாசிப்பேர் தமிழர்கள். அவர்களே நாட்டின் பொருளாதார மீட்சிக்கும் உயர்வுக்கும் பங்களிக்கக் கூடிய மிக வலுவான பொருளாதார நிலையில் புலம்பெயர் நாடுகளில் உள்ளனர்.

அவர்களைச் சமாளித்து, மீண்டும் தாய் நாட்டின் பக்கம் நோக்க வைப்பதன் மூலம் பொருளாதார இக்கட்டில் இருந்து நாட்டை மீட்டெடுக்க முடியும் என்பதை உணர்ந்துதான் வெளிவிவகார அமைச்சர் இப்படிக் கூறியுள்ளார். அது சரியானதே.

ஆனால் பொருளாதார வலிமையில் உள்ள புலம்பெயர் ஈழத் தமிழர்கள் தாயகம் மீண்டு, இங்கு தமது முதலீடுகளைச் செய்ய வேண்டுமானால், அதற்குசிலஅடிப்படைத்தேவைப்பாடுகள் நிறைவு செய்யப்பட வேண்டும்.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் தமிழர்கள் வகைதொகையின்றிக் கொன்றொழிக்கப்பட்ட கொடூரத்தின் பின்னால் உள்ள உண்மைகள் கண்டறியப்பட்டு, அம்பலப்படுத்தப்பட வேண்டும். அவற்றின் அடிப்படையில் பொறுப்புக் கூறல் நிலைநாட்டப்பட்டு, தவறிழைத்தோர் தண்டிக்கப்பட்டு, பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணங்கள்அளிக்கப்பட்டு, மீளநிகழாமை உறுதி செய்யப்பட்டு, நிரந்தரத் தீர்வு உருவாக்கப்பட வேண்டும்.

இந்த அடிப்படைகளை எல்லாம் நிறைவு செய்யாமல், புலம்பெயர் தமிழர்களின் மனதை வெல்வது என்பது நடக்கக்கூடிய காரியமே அல்ல.

இதனைப் புரிந்து கொண்டு, வெளிவிவகார அமைச்சரும் அவரின் அரசும் நடந்து கொள்வது பயன் தரக்கூடிய விடயமாகும்.

# எதிர்க்கட்சி எம்.பி.க்கள் 141 பேர் இடைநீக்கம்: இண்டியா கூட்டணி நாடு தழுவிய போராட்டம்




மக்களவை மற்றும் மாநிலங்களவையைச் சேர்ந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 141 பேர் இடைநீக்கம் செய்யப்பட்டதைக் கண்டித்து எதிர்வரும் 22 ஆம் திகதி நாடு தழுவிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடப்போவதாக இண்டியா கூட்டணி அறிவித்துள்ளது.

இண்டியா கூட்டணியின் 4 ஆவது கூட்டம் நேற்று டில்லியில் நடைபெற்றது. இதில், காங்கிரஸ், தி.மு.க., திரிணமூல் காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ், சமாஜ்வாதி கட்சி, சிவ சேனா, ம.தி.மு.க. உள்ளிட்ட 28 கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் பங்கேற்றனர்.

கூட்டத்துக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே,

"இண்டியா கூட்டணி சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர்கள் 28 பேர் பங்கேற்றார்கள். இண்டியா கூட்டணி எவ்வாறு முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்பது குறித்து ஒருமித்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சி எம்.பிக்கள் 141 பேர் இடைநீக்கம் செய்யப்பட்டதற்கு எதிராக கண்டன தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்களின் இடைநீக்கத்தைக் கண்டித்து எதிர்வரும் 22 ஆம் திகதி நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்களை நடத்த முடிவு செய்துள்ளோம்.

நாட்டை ஆள்வதற்கு தங்களைவிட சிறந்தவர்கள் வேறு யாரும் இல்லை என்று பிரதமரும் உள்துறை அமைச்சரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதை நாங்கள் சவாலாக எடுத்துக்கொள்கிறோம்.

இண்டியா கட்சிகளின் தொகுதிப் பங்கீடு மாநில அளவில் நடைபெறும். அதில் ஏதேனும் பிரச்சினை இருந்தால் அது தேசிய அளவில் முடிவு செய்யப்படும். வருகிற நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றுவதே முதல் இலக்கு. வெற்றி பெற்ற பிறகு பிரதமர் யார் என்பதை முடிவு செய்வோம். எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை தொடங்கப்படும். இதில் தாமதம் இருக்காது.

இண்டியா கூட்டணியை எவ்வாறு முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதில் கூட்டணி கட்சிகளிடையே ஒருமித்த கருத்து உள்ளது. இது மகிழ்ச்சியை அளித்துள்ளது. நாடு முழுவதும் 8 தொடக்கம் 10 வரையான பொதுக்கூட்டங்களை நடத்த நாங்கள் திட்டமிட்டுள்ளோம்.

கூட்டணி தலைவர்கள் ஒன்றாக மேடையில் தோன்றாவிட்டால் மக்களுக்கு அதுபற்றி தெரியாது.

எனவே, கூட்டணித் தலைவர்கள் ஒன்றாக சேர்ந்து பொதுக்கூட்டங்களை நடத்துவோம். இந்தக் கூட்டத்தில் பல்வேறு முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. அதில் ஒன்றுதான் 141 எம்.பிக்களை இடைநீக்கம் செய்ததைக் கண்டித்து நடைபெற உள்ள நாடு தழுவிய போராட்டம்" என

# ராஜீவ் கொலை வழக்கில் விடுதலையான ஜெயக்குமார் சென்னையில் இருக்க முடியாது

## உயர் நீதிமன்றத்தி தமிழக அரசு அறிவிப்பு

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலையில் விடுதலையான இலங்கையை சேர்ந்த ஜெயக்குமாரை சென்னையில் உள்ள குடும்பத்தினருடன் சேர்ந்து வாழ அனுமதிக்க முடியாது என உயர் நீதிமன்றத்தில் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டு திருச்சி கொட்டப்பட்டு அகதிகள் முகாமில் அடைக்கப்பட்டுள்ள இலங்கையை சேர்ந்த ஜெயக்குமார், உயர்நீதிமன்ற கிளையில் தாக்கல் செய்த மனுவில், "முன்னாள் பிரதமர் ராஜிவ்காந்தி கொலை வழக்கில் 32 ஆண்டுகளாக ஆயுள் தண்டனை அனுபவித்து வந்தேன். உச்ச நீதிமன்ற உத்தரவால் 11.11.2022 இல் விடுதலையானேன். சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட என்னை திருச்சி கொட்டப்பட்டு இலங்கை அகதிகள் முகாமில் 12.11.2022 முதல் காவலில் வைத்துள்ளனர்.

இந்த முகாம் சிறை வாசத்தை விட மோசமாக உள்ளது. எங்களை முகாம் அறையிலிருந்து வெளியே வரவும், பிற கைதிகளுடன் பழகவும் அனுமதிப்பதில்லை. இதே நிலை தொடர்ந்தால் மன உளைச்சலுக்கு ஆளாக நேரிடும். என்னை மீண்டும் இலங்கைக்கு அனுப்புவது மரண தண்டணைக்கு சமமானது. நான் இலங்கை செல்ல விரும்பவில்லை. என் குடும்பத்தினர் சென்னையில் வசிக்கின்றனர். அவர்களுடன் தங்குவதற்கு அனுமதிக்க வேண்டும்" என்று கூறப்பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் முன்பு விசாரணைக்கு வந்தது. பின்னர், குடும்பத்தினருடன் வசிக்க வேண்டும் என்ற ஜெயக்குமாரின் கோரிக்கை மீது தமிழக அரசின் முடிவு என்ன? சென்னை வியாசர்பாடியில் வசிக்கும் ஜெயக்குமாரின் குடும்பத்தினர் வீட்டில் அவரை காவலில் வைக்கலாமே? முகாம் காவலை திருச்சியில் இருந்து சென்னைக்கு மாற்ற முடியாதா? சென்னையில் குறிப்பிட்ட காவல் நிலைய எல்லைக்குள் அவரை நடமாட அனுமதிக்கலாமே? என நீதிபதி கேள்வி எழுப்பினர்.

இதன்போது அரசு வழக்கறிஞர் வாதிடுகையில்,

"ஜெயக்குமாரை சென்னையில் உள்ள குடும்பத்திருடன் தங்க வைக்க அனுமதிக்க முடியாது. இலங்கை யில் இருந்து சட்டவிரோதமாக வந்ததால் திருச்சி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ளார். சிறப்பு முகாமை வேறு இடத்திற்கு மாற்ற இயலாது. இலங்கையில் இருந்து வந்தவர் என்பதால் மத்திய அரசும் தான் முடிவெடுக்க வேண்டும். எனவே ஜெயக்குமாரை குடும்பத்தினருடன் தங்க அனுமதி அளிக்க இயலாது" என்றார்.

இதையடுத்து மனு மீதான தீர்ப்பை ஒத்திவைத்து நீதிபதி உத்தரவிட்டார்.

# காசாவில் அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் தாக்குதல்: 30 பேர் பலி



இஸ்ரேல் - ஹமாஸ் போர் 100 நாள்களைக் கடந்து நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், இஸ்ரேல் நேற்று நடத்திய தாக்குதலில் வடக்கு காசாவின் ஜபாலியாவில் உள்ள அகதிகள் முகாமில் 10 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

அதேபோல் ரஃபாவில் மூன்று குடியிருப்புகள் குண்டு வீசி தகர்க்கப்பட்டது. இதில், 29 பேர் பலியாகினர். பலர் இடிபாடுகளில் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

ரஃபாவில் இஸ்ரேலியப் படைகள் நடத்திய தாக்குதலில் அடெல் ஜரோப் என்ற பத்திரிகையாளரும் உயிரிழந்துள்ளார்.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி தொடங்கியதிலிருந்து இதுவரை இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் காசாவில் பெண்கள், குழந்தைகள் உள்பட 19 ஆயிரத்து 453 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இஸ்ரேல் – ஹமாஸ் குழுக்கள் மாறி மாறி தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதில் அப்பாவி பொதுமக்கள் தங் களது உயிரை இழந்து வருகின்றனர்.

இந்த நிலையில், அப்பாவி மக்களின் உயிரைக் காக்க காசாவில் உடனடியாக போர் நிறுத்தம் செய்ய வலியுறுத்தி ஐ.நா. பொதுச் சபையில் அண்மையில் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக இந்தியா உள்ளிட்ட 153 நாடுகள் ஆதரவாக வாக்களித்தன. அமெரிக்கா, இஸ்ரேல், ஆஸ்திரியா உள்ளிட்ட 10 நாடுகள் எதிர்த்து வாக்களித்தன.

இஸ்ரேல் போருக்கு அமெரிக்க கூட ஆதரவை தளர்த்தி வருகிறது. “காசா மீது இஸ்ரேல் கண்மூடித்தனமாக குண்டுவீசித் தாக்குதல் நடத்தி வருகிறது. ஹமாஸ் படையினர் மீதான தாக்குதலில், பாலஸ்தீன மக்களும் கொல்லப்பட்டு வருகின்றனர். இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தனது அரசியல் நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள வேண்டும். இதே நிலை தொடர்ந்து நீடித்தால் இஸ்ரேல் மிக கடினமான நிலையை சந்திக்க நேரிடும். இஸ்ரேல் உலகளாவிய ஆதரவை இழந்து வருகிறது” என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வெளிப்படையாகக் கூறியிருந்தார்.

அதற்கும் இரங்காத இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு “நாங்கள் கடைசி வரை போராடுவோம். இதற்குமேல் பேச எதுவுமில்லை. போர் நிறுத்தத்துக்கு சர்வதேச அளவில் அழுத்தம் கொடுத்தாலும் காசாவில் இஸ்ரேல் இராணுவம் தொடர்ந்து சண்டையிடும் என்பதை வலியுடன் பதிவு செய்கிறேன். யாராலும் எங்களைத் தடுக்க முடியாது. வெற்றியை நோக்கி இறுதிவரை நாங்கள் செல்வோம். அதைவிட எங்களுக்கு பெரிது எதுவும் கிடையாது” என்று கூறியிருந்தார்.

இந்த நிலையில், இஸ்ரேல் தனது தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது. இஸ்ரேல் நேற்று நடத்திய தாக்குதலில் வடக்கு காசாவின் ஜபாலியாவில் உள்ள அகதிகள் முகாமில் 10 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். அதேபோல் ரஃபாவில் மூன்று குடியிருப்புகள் குண்டு வீசி தகர்க்கப்பட்டதில் 29 பேர் பலியாகினர். பலர் இடிபாடுகளில் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

# ஐஸ்லாந்தில் எரிமலை வெடிப்பு!



ஐஸ்லாந்தின் ரெய்க்ஜேன்ஸ் தீபகற்பத்தில் உள்ள எரிமலை வெடித்து சிதற தொடங்கியுள்ளது.

இந்த நிலையில், வாயு மாசுபாடு அதிகரிக்கக் கூடுமென எச்சரிக்கப்பட்டுள்ளது.

கிரின்டாவிக் நகரத்தில் இருந்து 4 கிலோ மீட்டர் தொலைவில் நேற்றிரவு இந்த எரிமலை வெடிக்க தொடங்கியிருந்த நிலையிலேயே, ஐஸ்லாந்தின் வானிலை ஆய்வு மையம் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

இந்த எரிமலை வெடிப்பு காரணமாக கிரின்டாவிக் பகுதியில் வசிக்கும் 4 ஆயிரத்துக்கும் அதிகமானோர் வெளியேற்றப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இவ்வாறாக வெளியேற்றப்பட்டவர்கள், பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில நாட்களுக்கு முன்பு ரெய்க்ஜாவிக் தீபகற்பகத்தில் ஆயிரக்கணக்கான நிலநடுக்கங்கள் ஏற்பட்டிருந்த நிலையில், எரிமலை வெடிப்புக்கு முன்பாக நிலநடுக்கம் ஏற்படுமென விஞ்ஞானிகள் தெரிவித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# மட்டக்களப்பு அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்புக் கலந்துரையாடல் நேற்று

**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலகப் பிரிவுகளில் இயங்கி வரும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்புக் கலந்துரையாடல் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜேஜே முரளிதரன் தலைமையில் நேற்று இடம் பெற்றது.

இதன் போது அரசாங்க அதிபர் மாவட்டத்தின் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு திட்டங்களை நடைமுறைப்படுத்தி மாவட்டத்தின் முன்னேற்றத்தில் புலப்படும் விதமாக செயற்படுத்துமாறு கோரிக்கை விடுத்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அரசாங்க அதிபர் அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது திட்ட வரைவுகளை மேற்கொள்ளும் போது பிரதேச செயலாளர்களுடன் கலந்துரையாடி மாவட்டத்திற்குத் தேவையான முதன்மை விடயங்களை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் 37 அரச சார்பற்ற நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்திட்டங்கள் தொடர்பாக நிறுவன உத்தியோகத்தியோகத்தர்களினால் தெளிவுபடுத்தப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த அரச சார்பற்ற நிறுவனங்களினால் போசாக்கின்மை, பாடசாலை இடைவிலகல் போன்றவற்றைத் நிவர்த்தி செய்தல், இளைஞர்கள் மத்தியில் போதைப் பொருள் பாவனையைத் தடுத்தல், தொழில் பயிற்சி வழங்கி சுயதொழிலை ஊக்குவித்தல், வாழ்வாதார உதவி மற்றும் மாணவர்களுக்கான கற்றல் வசதிகளை வழங்குதல், வீட்டுத் தோட்ட செய்கைகளை ஊக்குவித்தல், கால்நடைகளை வழங்கி வாழ்வாதாரத்தை உயர்த்துதல் போன்ற வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இந் நிகழ்வில் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.ஜதிஸ்குமார், பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், பிரதி திட்டமிடல் பணிப்பாளர்கள், வலயக் கல்வி அலுவலக உயர் அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாளர் யு.எஸ்.எம் ரிஸ்வி மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் நுண்நிதி ஒருங்கிணைப்பாளர் ஆர். சுதர்ஷன் உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.
















# பொலிஸூக்கு ஆள்சேர்ப்பு நடவடிக்கைகள் மட்டக்களப்பு கல்லடி பொலிஸ் கல்லூரியில்


**(கனகராசா சரவணன்)**

நாடளாவிய ரீதியில் உள்ள பொலிஸ் நிலையங்களில் பொலிஸ் சேவையில் கடமையாற்றுவதற்காக இலங்கை பொலிஸ் ஆள்சேர்ப்புத் திணைக்களத்தின் ஊடாக விண்ணப்பங்கள் கோரப்பட்டு ஆள்சேர்ப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் பொலிஸ் சேவைக்கு வடக்கு கிழக்கு மற்றும் மலையக பகுதிகளில் இருந்து தமிழ் மொழி மூலமான பொலிஸ் சேவைக்கு விண்ணப்பிக்கப்பட்ட 122 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான ஆள்சேர்ப்பு நடவடிக்கைகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மட்டக்களப்பு கல்லடி பொலிஸ் கல்லூரியில் நடைபெற்றது .

மட்டக்களப்பு கல்லடி பொலிஸ் கல்லூரி பொறுப்பதிகாரி எஸ்.ரி. சிவநாதன் ஒழுங்கமைப்பில் பொலிஸ் கல்லூரி உதவிப் பணிப்பாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குமார சிங்க தலைமையில் மட்டக்களப்பு கல்லடி பொலிஸ் கல்லூரி பொலிஸ் உத்தியோகத்தர்களினால் ஆள்சேர்ப்பு பதிவு நடவடிக்கைகள் முன்னெடுக்கபட்டன

மட்டக்களப்பு கல்லடி பொலிஸ் கல்லூரியில் இடம்பெற்ற ஆள்சேர்ப்பு நடவடிக்கையின் பின் பொலிஸ் திணைக்களத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்டவர்களுக்கான பயிற்சிகள் மட்டக்களப்பு கல்லடி பொலிஸ் கல்லூரியில் ஆரம்பிக்கபபட்டமை குறிப்பிடத்தக்கது.





# புத்தளம் பெண்கள் அரபுக் கல்லூரியின் அதிபர் எம்.எச்.எம்.முனீர் காலமானார்

**(கற்பிட்டி எம்.எச்.எம்.சியாஜ்)**

புத்தளம் இஸ்லாஹிய்யா பெண்கள் அரபுக் கல்லூரியின் அதிபர் அஷ்ஷெய்க் எம்.எச்.எம்.முனீர் (முஹம்மதி) நேற்று செவ்வாய்க்கிழமை வபாத்தானார்.



புத்தளத்தில் கல்வி ஒளியூட்டிய காஸிமிய்யா அரபுக் கல்லூரியின் முன்னாள் அதிபர் மர்ஹூம் மஹ்மூத் ஹஸ்ரத்தின் பேரப்பிள்ளையான இவர் புத்தளம் மாவட்ட ஜம்இயத்துல் உலமா தலைவர் அப்துல்லா மஹ்மூத் ஆலிமின் சகோதரிய–ின் மகனும், இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் அமீர் அஷ்ஷெய்க் எம்.எச்.எம்.உஸைர் இஸ்லாஹியின் சகோதரரும் ஆவார்.

புத்தளம் நகர கல்வி மேம்பாட்டிற்காக புத்தளம் பில்லர்ஸ் அமைப்பினை தோற்றுவித்து அதன் இணைத் தலைவர்களில் ஒருவராக இறுதி வரை சேவையாற்றிவர்.

1980 சாஹிரா தேசிய பாடசாலையின் சாதாரண தர குழுவினரின் 80'ஸ் சஹீரியன்ஸ் ஹீரோஸ் அமைப்பின் அங்கத்தவராகவும் அதன் ஆலோசகராகவும் செயற்பட்டவர்.

அன்னாரின் ஜனாஸா இன்று புதன்கிழமை காலை 09 மணிக்கு புத்தளம் பகா பள்ளி மைய வாடியில் நல்லடக்கம் செய்யப்படும்.

# புத்தளத்தின் அரசியல் உரிமையிலும் அதிகாரத்திலும் வன்னி எம்.பி. ரிஷாத் தலையிட அனுமதிக்க முடியாது

## முன்னாள் மாகாண சபை உறுப்பினர் நியாஸ் சாட்டை




**(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)**

புத்தளத்தின் அரசியல் உரிமையும் அதிகாரமும் புத்தளம் மக்களுக்குரியவை. அதனைக் கூறு போடவோ தான் நினைத்தெல்லாம் செய்வதற்கோ அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத்துக்கு எவ்வித அதிகாரமும் இல்லை என வடமேல் மாகாண சபையின் முன்னால் உறுப்பினர் எஸ்.எச்.எம் நியாஸ் புத்தளத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

கடந்த 33 வருடங்களாக நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் கிடைக்காமல் அரசியல் அநாதைகளாகக் காணப்பட்ட புத்தளம் தொகுதி மக்கள் தமக்கான நாடாளுமன்ற உறுப்பினரை பெற்றுக்கொள்ள வேணடும் என்ற முனைப்போடு உலமாக்கள், புத்திஜீவிகள், கல்விமான்கள் என சகலரையும் ஒன்றிணைத்து ஒரே கூட்டணியாக உருவாக்கப்பட்டு அதன் மூலம் புத்தளம் வாக்காளர்களின் ஒற்றுமைக்கு கிடைத்த வெற்றியாக புத்தளம் தொகுதிக்கும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் 33 வருடங்களின் பின்பு கிடைக்கப் பெற்றது.

அந்த நாடாளுமன்ற உறுப்பினரை வெளியேற்றுவதற்கு பல முயற்சிகளை இந்த மக்கள் காங்கிரஸின் தலைவர் மேற்கொள்வது மிகவும் வேடிக்கையாக இருக்கின்றது.

அது மாத்திரமின்றி புத்தளத்து அரசியல் பரப்பில் தலையிட முயல்வதையும், புத்தளத்து அரசியல் பரப்பை கூறுபோட நினைப்பதையும் உடனடியாக நிறுத்திக் கொள்ள வேணடும். புத்தளத்து அரசியல் புத்தளம் மக்களுக்கு உரியது. இதில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரோ அவரின் அடி வருடிகளோ தலையிடுவதைப் புத்தளம் மக்களாகிய நாங்கள் எந்த வகையிலும் அனுமதிக்க மாட்டோம். இதற்கு எதிராகக் களத்தில் இறங்கி போராடுவதற்கும் புத்தளம் மக்கள் என்ற வகையில் நாங்கள் தயாராக இருக்கிறோம்.

மேலும் இந்த புத்தளம் அரசியல் பரப்பில் நாடாளுமன்றத்திலோ, மாகாண சபையிலோ, உள்ளூராட்சி மன்றங்களிலோ யார் பிரதிநிதிகளாக இருக்க வேண்டும் என்பதைப் புத்தளத்து அரசியல்வாதிகளும் புத்தளத்து மக்களும் தீர்மானிப்பார்கள் தவிர, இதனைத் தீர்மானிப்பதற்கு வன்னி நாடாளுமன்ற உறுப்பினருக்கோ உங்களுக்கு சேவை செய்பவர்களுக்கோ எவ்வித அதிகாரமும் இல்லை. அவ்வாறு செயற்பட முயலுவீர்களானால் உங்களுக்கு எதிராகக் களத்தில் இறங்குவதற்கும் நாங்கள் தயாராகவே இருக்கின்றோம்.

புத்தளத்து அரசியல் பரப்பில் விதை நட்டியவர்கள் புத்தளம் மக்கள். அதனை அறுவடை செய்பவர்களும் புத்தளம் மக்களே என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். – என்றார்.

ශ්‍රී ලංකා විදේශ සේවා නියුක්ති කාර්යාංශය
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்
SRI LANKA BUREAU OF FOREIGN EMPLOYMENT

# வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பயிற்சி நிலையங்கள் யாழ்., அம்பாறையில்!

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு சொந்தமான பயிற்சி நிலையங்களை யாழ்ப்பாணம், அம்பாறை மாவட்டங்களிலும் ஹோமாகமயிலும் நிறுவுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை எதிர்பார்த்திருப்பவர்களுக்கு, அவர்கள் செல்கின்ற நாடுகளுக்கு ஏற்றவாறான, துரிதமான விசேட பயிற்சி வேலைத்திட்டம் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தால் நடத்தப்படுகின்றது.

நாடளாவிய ரீதியில் குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப் பட்ட கட்டடங்களில் குறைந்தளவு வசதிகளுடன் இந்தப் பயிற்சிகள் தற்போது நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், உரிய வசதிகளுடன் கூடிய பயிற்சி நிலையங்களை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு சொந்தமான காணிகளில் அமைப்பதற்கு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் யோசனை சமர்ப்பித்திருந்தார்.

# டிஜிட்டல் அடையாள அட்டைகள் 2024 ஜனவரி முதல் விநியோகம்




எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் டிஜிட்டல் அடையாள அட்டைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் கீழ் புதிய அடையாள அட்டைகளை பெறுவதற்காக விண்ணப்பித்தவர்களுக்கு டிஜிட்டல் அடையாள அட்டை வழங்கப்படவுள்ளது.


இதனை தொடர்ந்து படிப்படியாக அனைத்து மக்களுக்கும் டிஜிட்டல் அடையாள அட்டை வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக ஆள்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, அடையாள அட்டைக்கான டிஜிட்டல் படத்தைப் பெறுவதற்கான கட்டணம் 400 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானியின் மூலம் புதிய கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் 150 ரூபா முதல் பல்வேறு கட்டணங்கள் வசூலிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு வொல்பெக்கியா திட்டம் பரிந்துரைப்பு




டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதில் வெற்றிகரமான பெறுபேறுகளைக் காட்டியுள்ள வொல்பெக்கியா (Wolbachia) திட்டத்தை மேலும் விஸ்தரிக்குமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

நுளம்புகள் வொல்பெக்கியா எனப்படும் இயற்கை பக்டீரியாவை சுமக்கும்போது, அவற்றில் டெங்கு போன்ற வைரஸ்களை பரப்பும் திறன் பெருமளவில் குறைக்கிறது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. பிராந்தியத்தில் உள்ள கொசுக்களுக்கு இத்தகைய இயற்கை பக்டீரியாவைத் தொற்ற வைப்பதன் மூலம் டெங்கு பரப்பும் அவற்றின் திறனை – வீரியத்தை – குறைப்பதே இப்போது பரிந்துரைக்கப்பட்டுள்ள திட்டமாகும்.

கொழும்பு வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வொல்பெக்கியா விசேட டெங்கு ஒழிப்பு திட்டம் வெற்றியளித்துள்ளது.

இந்த திட்டத்தினை கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில், டெங்கு பரவல் அதிகமாக காணப்படும் அனைத்து சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் நடைமுறைப்படுத்துமாறு தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதற்காக இராணுவம் மற்றும் பொலிஸாரின் ஆதரவை பெற்றுக் கொள்ளுமாறும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், அரச நிறுவனங்களில் டெங்கு நோயை கட்டுப்படுத்துவதற்கான முறையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உரிய அரச நிறுவனங்களுக்கு பொறுப்புகளை வழங்குமாறும் சாகல ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற டெங்கு நோயை கட்டுப்படுத்தும் வேலைத்திட்டத்தின் தற்போதைய நிலை குறித்த முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தில் சாகல ரத்நாயக்க இந்த அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

மேல் மாகாணத்தில் டெங்கு பரவல் அதிகரித்துக் காணப்படும் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளை மையப்படுத்தி, கடந்த காலங்களில் டெங்கு பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்காக அந்த பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் முன்னேற்றம் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

மத்திய மாகாணத்தின் அனைத்து சுகாதார மற்றும் வைத்திய அதிகாரி பிரிவுகளையும் உள்ளடக்கி, அனைத்து கண்காணிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே, டெங்கு ஒழிப்பு மற்றும் சிகிச்சைகளை மேலும் வலுப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சின் செயலாளர் விசேட வைத்திய நிபுணர் பாலித மஹிபால அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதேவேளை, இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் பதிவாகியுள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 82,655 ஆக அதிகரித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்திலேயே அதிகமான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.



# சிறப்புப் பிரிவு கைதிகளை ஏற்றிச்செல்லும் பஸ்களில் சி.சி.ரி.வி. கெமராக்களைப் பொருத்த நடவடிக்கை

சிறப்பு பிரிவு கைதிகளை ஏற்றிச் செல்லும் சிறைச்சாலை பஸ்களில் சி.சி.ரி.வி. கெமராக்களைப் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்தும் நோக்கில் பஸ்களில் இவ்வாறு சி.சி.ரி.வி. கெமராக்கள் பொருத்தப்படவுள்ளன எனச் சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் காமினி பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகளில் இருந்து கைதிகள் வெளியில் அழைத்துச் செல்லப்படும் சந்தர்ப்பங்களில் அவர்களின் செயற்பாடுகள் தொடர்பில் இதனூடாக கண்காணிக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

பஸ்ஸிற்குள் கைதிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் மேற்கொள்ளும் செயற்பாடுகள் தொடர்பிலும் இதனூடாக கண்காணிக்க சந்தர்ப்பம் கிடைக்குமென சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சில சந்தர்ப்பங்களில் வெளியில் இருந்து பஸ்ஸிற்குள் போதைப் பொருளை வீசும் சம்பவங்களும் பதிவாகியுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறைச்சாலைகளில் தற்போது போதைப்பொருள்களுக்கு அடிமையான சுமார் 14 ஆயிரத்து 500 பேர் உள்ளனர் என சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.



# பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதான மாணவன் உள்ளிட்ட நான்கு பேருக்குப் பிணை

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் மட்டக்களப்பு – வந்தாறுமூலையில் கைது செய்யப்பட்ட பாடசாலை மாணவன் உள்ளிட்ட நான்கு பேருக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

வழக்கு விசாரணை நேற்று வாழைச்சேனை நீதிமன்றில் இடம்பெற்ற போது பிணை வழங்கப்பட்டுள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்கு அமைவாக, வாழைச்சேனை பொலிஸாரினால் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து வாழைச்சேனை நீதிவான் எம்.ஐ.எம். ரிஸ்வான் சந்தேக நபர்கள் நால்வருக்கும் பிணை வழங்கினார்.

இந்த வழக்கு மீண்டும் ஜனவரி முதலாம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

மட்டக்களப்பு – வந்தாறுமூலையில் பாடசாலை மாணவன் உள்ளிட்ட நான்கு பேரும் கடந்த நவம்பர் 27 ஆம் திகதி பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# டிஜிட்டல் பொருளாதாரக் கொள்கையை அறிமுகப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை

## தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தகவல்



"அரசாங்கங்கள் மாறும் போது மாற்றம் அடையாத டிஜிட்டல் பொருளாதாரக் கொள்கையை அறிமுகப்படுத்துவதற்கு அவசியமான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கான அடிப்படை பணிகள் அடுத்த வருடம் முதல் மேற்கொள்ளப்படும். அதற்கான நிதி ஒதுக்கீடுகள் 2024 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது."

– இவ்வாறு தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"இலங்கையில் டிஜிட்டல் பொருளாதாரத்தைப் பிரபலப்படுத்தும் நோக்கில் சர்வதேச முதலீட்டுச் செயலமர்வு ஒன்றை அடுத்த வருடம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இம்முறை வரவு – செலவுத் திட்டத்தில் டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் செயற்கை நுண்ணறிவுக்காக இரு நூறு கோடி ரூபாவுக்கும் அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்த நிதியை டிஜிட்டல் மயமாக்கலுக்கு பயன்படுத்துவதன் மூலம் 2025 ஆம் ஆண்டளவில் இலங்கை மக்கள் அதன் பயனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக நியமிக்கப்படும் வரை, டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் செயற்கை நுண்ணறிவு பற்றிய வார்த்தைகள் இந்த நாட்டில் மிகவும் குறைவாகவே பயன்படுத்தப்பட்டன.

ஜனாதிபதியின் தொலைநோக்குப் பார்வையினால் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் செயற்கை நுண்ணறிவை இலகுவாகப் பயன்படுத்த முடியும்.

உலக நாடுகளில் இந்த முறைமைகளைப் பயன்படுத்தி, பொருளாதாரம் எவ்வாறு ஸ்திரப்படுத்தப்பட்டுள்ளது என்பதைக் கண்டுகொள்ள முடிந்துள்ளது. முன்னேறும் உலகுடன் இணைந்து, நாமும் முன்னோக்கிச் செல்ல வேண்டுமாயின் டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் செயற்கை நுண்ணறிவுக்கு அதிக வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.

இதன்படி, நாட்டின் பொருளாதாரத்தில் டிஜிட்டல் பொருளாதாரம் வழங்கி வந்த பங்களிப்பை 3 சதவீதத்தில் இருந்து 20 சதவீதமாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தில் அதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், புத்தாக்கங்களை ஊக்குவிக்கவும் நிதி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரச சேவையை டிஜிட்டல் மயமாக்குவதன் மூலம், செயற்திறன் மிக்க அரச சேவையைப் பேணுவதற்கான சூழல் உருவாக்கப்படுகிறது. அதன் மூலம் பொருளாதார வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்பை வழங்கும் ஆற்றல் கிடைக்கின்றது. தனியார் துறை ஏற்கனவே டிஜிட்டல் மயமாக்கலை நோக்கி வேகமாக முன்னேறிச் செல்கின்றது. அதன் ஊடாக போட்டித் தன்மை கொண்ட சேவைகளை வழங்குவதற்கு அரச சேவையை வலுப்படுத்தும் ஆற்றல் டிஜிட்டல்மயமாக்கலுக்கு உண்டு.

இந்த முழுமையான செயல்முறைகளின் மூலம் வலுவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது தற்போதைய அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும்." – என்றார்.

# பாடசாலைகளில் திறன் வகுப்பறைகளை நிறுவுவதற்கு இந்திய அரசின் நிதி உதவி

பெருந்தோட்டப் பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் திறன் வகுப்பறைகளை நிறுவுவதற்கான முன்னோடித் திட்டத்துக்கு நிதியுதவியை வழங்க இந்திய அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ், இரண்டு வருடங்களில் நுவரெலியா, கண்டி மற்றும் பதுளை மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பெருந்தோட்டப் பாடசாலைகளில் உயர்தர வகுப்புக்களுக்காக 60 திறன் வகுப்பறைகள் நிறுவப்படவுள்ளன.

இந்த முன்னோடிக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தேசிய பெறுகை திணைக்களத்தின் விதந்துரைகள் தற்போது வழங்கப்பட்டுள்ளன.

இதன்படி, குறித்த திட்டத்துக்கான செலவு 526.20 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளதுடன், 2024 ஆம் ஆண்டுக்காக 310 மில்லியன் ரூபா நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய, கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இந்திய உயர்ஸ்தானிகராலயம் மற்றும் நீர்வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சுக்கும் இடையில் ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த ஒப்பந்தத்தை கையெழுத்திடுவதற்கு அனுமதி கோரி பெருந்




தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.



# வற் வரி அதிகரிக்கப்பட்டாலும் கூட மின் கட்டணத்தில் மாற்றம் இல்லை

## மின் சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவிப்பு

"நாட்டில் அடுத்த மாதம் முதல் வற் வரி அதிகரிக்கப்படவுள்ள போதிலும், மின் கட்டணம் அதில் உள்வாங்கப்படவில்லை. இதனால், வற் வரி அதிகரிப்பு மின் கட்டணத்தில் தாக்கம் செலுத்தாது. எவ்வாறிருப்பினும் வற் வரி அதிகரிப்பு எரிபொருள் விலையில் தாக்கம் செலுத்தும்."

– இவ்வாறு மின் சக்தி மற்றும் வலு சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் குறிப்பிடுகையில் –

"இலங்கை மின்சாரசபை மறுசீரமைப்பு சம்பந்தமாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள சட்டம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் உட்பட சகல எதிர்க்கட்சிகள் தரப்புகளிடம் இருந்தும், தொழிற்சங்கங்களிடமிருந்தும், ஏனைய தரப்புக்களிடமிருந்தும் ஜனவரி 3ஆம் திகதிக்கு முன்னர் பரிந்துரைகள், திருத்தங்கள், யோசனைகள் எழுத்து மூலம் எதிர்பார்க்கப்படுகின்றன.

கிடைக்கப்பெறும் யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு சட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு நாம் தயாராகவுள்ளோம்.

ஜனவரியில் மின் கட்டணத் திருத்தம் தொடர்பில் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. கடந்த இரண்டரை மாத காலமாக நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக நீர் மின்உற்பத்தி அதிகரித்துள்ளது. அனல் மின் உற்பத்தி குறைவடைந்துள்ளதோடு, உற்பத்தி செலவுகளும் குறைவடைந்துள்ளன.

எனவே இதனால் இலங்கை மின் சாரசபைக்கு கிடைத்துள்ள இலாபத்தின் பயனை மக்களும் அனுபவிக்கும் வகையில் ஜனவரி விலை திருத்தத்தை மேற்கொள்ளும் போது மின் கட்டணத்தை குறைக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு தற்போது தொடர்ச்சியாக எரிபொருள் சுத்திகரிப்பு இடம்பெறுவதால் அதன் ஊடாகவும் இலாபம் கிடைத்துள்ளது. எதிர்வரும் வாரங்களிலும் மழையுடனான காலநிலை நிலவும் என்று எதிர்பார்க்கப்படுவதால், அடுத்த இரண்டு மாதங்களுக்கு மின் உற்பத்திக்கான எரிபொருள் செலவு மிகக் குறைவாகவே காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே சுத்திகரிப்பின் பின்னர் மேலதிகமாகக் காணப்படும் மசகு எண்ணெய்யை மீள் ஏற்றுமதி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது அதிகரிக்கப்பட்டுள்ள வற் வரியானது மின் உற்பத்தியில் தாக்கம் செலுத்தாது. எவ்வாறிருப்பினும் வற் வரி அதிகரிப்பானது எரிபொருள் விலையில் தாக்கம் செலுத்தும்.

எனவே எரிபொருள் விலையில் எவ்வாறு மக்களுக்கு நிவாரணம் வழங்குவது என்பது தொடர்பில் நிதி அமைச்சுடன் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வற் வரி அதிகரிப்பால் எரிபொருள் விலைகள் அதிகரிக்கும். இதற்காக எடுக்கக் கூடிய மாற்று தீர்மானங்கள் என்ன என்பது தொடர்பில் ஆராயப்பட்டு வருகிறது.

ஜனவரியின் பின்னர் மேற்கொள்ளப்படும் மின் கட்டண திருத்தத்தின் போதும் வற் வரி உள்ளடக்கப்பட மாட்டாது. மாறாக நிதி அமைச்சினால் வற் வரி அதிகரிப்பில் மின்சாரத் துறையும் உள்ளடக்கப்பட வேண்டும் என்று கோரப்பட்டால் மாத்திரமே மின் கட்டணத்தில் வரி அதிகரிப்பு தாக்கம் செலுத்தும்." – என்றார்.

# மழையினால் வவுனியாவில் 279 குடும்பங்கள் பாதிப்பு

வவுனியாவில் தொடரும் மழை காரணமாக 279 குடும்பங்களை சேர்ந்த 878 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதில் 226 குடும்பங்களைச் சேர்ந்த 694 பேர் தற்காலிகமாக உறவினர் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

மேலும் ஒரு வர்த்தக நிலையம் மற்றும் ஒரு கிராம அபிவிருத்தி சங்கம் என்பன பகுதியளவிலும், புளியங்குளம், ஒலுமடு, சமனங்குளம், மகாமயிலங்குளம், மடுகந்தை, பிறப்பமடுவ பகுதிகளில் 12 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.



# காலநிலை முன் எச்சரிக்கைப் பிரிவு ஜனாதிபதி தலைமையில் அறிமுகம்

அனர்த்தங்கள் தொடர்பான முன் எச்சரிக்கை பொறிமுறையை மேலும் பலப்படுத்துவதன் ஊடாக இலங்கை மக்களின் வாழ்க்கையை மேலும் பாதுகாக்கும் விதமாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் முழுமையான அனர்த்த முன் எச்சரிக்கை பொறிமுறையொன்றை அறிமுகம் செய்துள்ளது.

இலங்கைத் தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் இலங்கையிலுள்ள முன்னணி தொலைபேசி நிறுவனங்கள் இணைந்து இந்த பொறிமுறையை வெளியிடுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் (ஓய்வு) எஸ்.ரணசிங்க, இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் டீ.எம்.எம்.திசாநாயக்க ஆகியோர் கைசாத்திட்டமையோடு, இதன்போது பிரதான தொலைபேசி நிறுவனங்களின் நிறைவேற்று அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

அதன் பங்குதாரர்களான, டயலொக் ஆசியாட்டா குழுமத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சுபுன் வீரசிங்க, ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜானக ஆர். அபேசிங்க, பாரதீ எயர்டெல் தனியார் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அசீஸ் குப்தா, மொபிடெல் தனியார் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுதர்ஷன கீகனகே, ஹவிசன் டெலிகொமினிகேஷன் தனியார் நிறுவனத்தின் பதில் பிரதம நிறைவேற்று அதிகாரி சுமித்ரா குப்தா உள்ளிட்டவர்களும் கலந்துகொண்டனர்.

மேற்படி கைத்தொலைபேசிகளுக்கான செயலியை தேசிய பாதுகாப்பு தினமான 2024 டிசம்பர் 26 ஆம் திகதி வெளியிட எதிர்பார்க்கப்படுகிறது.

வானிலை மற்றும் காலநிலை அனர்த்தங்கள் மற்றும் ஏனைய காரணிகளால் ஏற்படக்கூடிய அனர்த்தங்கள் தொடர்பில் உரிய முன் எச்சரிக்கையுடன் செயற்படும்பட்சத்தில், அதனால் ஏற்படக்கூடிய உயிர்ச் சேதங்களைக் குறைக்க முடியும். அதற்கமைய புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தொலைபேசி சேவைகள் வாயிலாக முழுமையான முன் எச்சரிக்கைகளை வழங்க முடியும்.

அதற்கமைய சுனாமி எச்சரிக்கை நடவடிக்கைகளைப் பலப்படுத்தும் நோக்கில் இந்த பொறிமுறை அறிமுகப்படுத்தப்பட உள்ளதோடு, அனர்த்த முகாமைத்துவப் பொறிமுறைக்குள் நாட்டின் 14 மாவட்டங்களில் சுனாமி அச்சுறுத்தலுக்கு முகம்கொடுக்க கூடியவர்கள் என அறியப்பட்ட சுமார் 60 ஆயிரம் பேருக்கு 'Ring Tone' முறையிலான ஒலியுடன் கூடிய முன் எச்சரிக்கை செய்தியொன்றை அனுப்ப எதிர்பார்க்கப்படுகிறது.

அதற்காக இரவு வேளைகளில் சயிரன் ஒலியுடன் கூடிய முன் எச்சரிக்கை பொறிமுறையொன்று உருவாக்கப்படும்.

மேற்படித் திட்டத்தை மேலும் விரிவுபடுத்தும் வகையில் மண்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கு பாதிப்புகள் தொடர்பிலான முன் எச்சரிக்கைகளையும் இதனூடாக வழங்குவதால் முழுமையான முன் எச்சரிக்கை பொறிமுறையொன்றை முன்னெடுத்துச் செல்ல எதிர்பார்க்கப்படுகிறது.





# இன்றைய ராசி பலன்கள் - 20.12.2023




இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல. பொறுப்புகள் அதிகமாகும். இது உங்களுக்கு சுமையாக இருக்கும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். எனவே உங்கள் பணிகளை திட்டமிட வேண்டும். அவ்வாறு செய்யவில்லையெனில் பணிகள் பாதியில் நிற்கும்.

உங்கள் அகந்தைப் போக்கை தவிர்ப்பது நல்லது. அதன் மூலம் உங்கள் துணையை மகிழ்விக்கலாம். அனுசரித்துப் போவதன் மூலம் மகிழ்ச்சி நிலவும்.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. அதிக பொறுப்புகளை ஏற்றுக் கொள்வது பற்றி கவலைப்படுவீர்கள்.

பதட்டம் காரணமாக கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. தூக்கமின்மைபாதிப்பும் ஏறபட வாய்ப்புள்ளது.




இன்று நீங்கள் பதட்டப்படலாம். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல.

நீங்கள் செய்யும் பணியும் முயற்சியும் வெற்றியைப் பெற்றுத் தராது. உங்கள் பணியில் மாற்றம் காண நேரலாம். அது உங்கள் விருப்பங்களை நிறைவேற்றும்.

நீங்கள் உங்கள் துணையுடன் வாக்குவாதம் செய்வீர்கள். மகிழ்ச்சியாக இருக்க இதனை தவிர்க்க வேண்டும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. நீங்கள் தேவையற்ற செலவுகளை செய்ய நேரும்.

உங்கள் குடும்ப நண்பர்களின் ஆரோக்கியத்திற்காக மருத்துவ செலவுகள் ஏறப்டலாம். இது உங்களுக்கு சற்று கவலை ஏற்படுத்தும்.




இன்று நீங்கள் நல்ல மனநிலயில் இருப்பீர்கள். நீங்கள் எந்த முடிவெடுத்தாலும் அது உங்களுக்கு சாதகமாக அமையும்.

உங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ள நல்ல வாய்ப்பு உள்ளது. உது உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும்.

நீங்கள் உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று நீங்கள் பணம் சேமிப்பீர்கள். ஊக்கத் தொகை வகையில் பண வரவு காணப்படும்.

நீங்கள் பூரண ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள். ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருகாது. உங்களிடம் ஆற்றலும் உறுதியும் நிறைந்து காணபபடும்.




இன்று புதிய நண்பர்களை பெறுவீர்கள். இதனால் உங்கள் சமூக வட்டாரம் விரிவடையும். நீங்கள் புகழடைவீர்கள்.நல்ல நிலைமை அடைவீர்கள்.

நீங்கள் விஷயங்களை சகஜமாக எடுத்துக்கொண்டு உங்கள் பணிகளை முடிப்பீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் சிறப்பான உறவை ஏற்படுத்திக் கொள்வீர்கள். பரஸ்பர புரிந்துணர்வு காரணமாக உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். உங்கள் சொத்துக்கள் அதிகரிக்கும். உங்கள் நிதிநிலைமையை சிறப்பாக வளர்த்துக் கொள்ள நல்ல வாய்ப்பு கிடைக்கும்.

இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள். நம்பிக்கையும் உறுதியும் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று உங்களுக்கு சிறப்பான நாள். இன்றுநீங்கள் உறுதியான மன நிலையில் இருப்பீர்கள். நீங்களாக முடிவெடுப்பீர்கள்.

பணியைப் பொறுத்தவரை சிறப்பான நிலை காணப்படும். மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கப் பெறுவீர்கள். புதிய வாய்புகள் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு கொணடிருப்பீர்கள். அன்பு பெருகி காணப்படும். இருவரும் ஒன்றாக இணைந்து மகிழ்வீர்கள்.

நிதிநிலைமை சீராக இருக்கும். உங்கள் சேமிப்பு நிலை உயரும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் காணப்படும். நீங்கள் பயனுள்ள முடிவுகளை எடுக்க இயலும். குறுகிய காலத்திற்குள் நீங்கள் உங்கள் பணிகளை திறமையாக முடிப்பீர்கள்.

நீங்கள் புதிய வாய்ப்புகளை பெறுவீர்கள். உங்கள் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். உங்கள் ஆரோக்கியமான உறவை பராமரிக்கும் மன நிலையில் இருப்பீர்கள்.

உங்கள் நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். ஊக்கத் தொகை வகையில் உங்கள் சேமிப்பு உயரும்.

இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள். உங்களிடம் உற்சாகமும் ஆற்றலும் காணப்படும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள் அல்ல. எனவே மகிழ்ச்சியுடன் இருக்க முயலுங்கள். பதட்டமான உணர்விற்கு வாய்ப்பு உள்ளது.

இன்று பணியிடச் சூழல் சாதகமாக இருக்காது. இன்று லாபம் நஷ்டம் இரண்டும் காணப்படாது. உங்கள் சகபணியாளர்களுடன் கவனமாக உறவாடவும்.

இன்று மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் துணையுடன் பேசுவதை தவிர்ப்பது நல்லது.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். நீங்கள் சேமிப்பை உயர்த்த இயலாது.

அசௌகரியம் மற்றும் பதட்டம் காரணமாக இன்று நீங்கள் கால் மற்றும் தொடை வலியால் பாதிக்கப்படுவீர்கள்.




இன்று உங்களுக்கு சாதகமான நாளாக அமையாது. நீங்கள் அதிக முயற்சி எடுக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று பணிகள் இறுக்கமாக காணப்படும். அதனை நீங்கள் அமைதியான முறையில் எற்றுக் கொள்ள வேண்டும். திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

குழப்பமான மனநிலை காரணமாக இன்று நீங்கள் உங்கள் துணையுடன் ஆரோக்கியமான உறவு கொள்ள இயலாது.

நிதி வளர்ச்சி சிறப்பாக காணப்படாது. அதிகரிக்கும் செலவினங்களை நீங்கள் எதிர்கொள்ள நேரும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

இன்று சிறிது அசௌகரியமாக உணர்வீர்கள். இதனால் பதட்டம் ஏற்படும். ஆரோக்கியக் குறைவு காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 20.12.2023




உங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்துகொள்வதற்கு பொதுவான இலக்கை நோக்கி செயல்படவும்.

அறிவார்ந்த முறையில் பணி செய்தால் மட்டுமே வெற்றி காண இயலும். அதன் மூலம் நீங்கள் உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள்.

குடும்பப் பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் மோதல் ஏற்படலாம். இதனால் உறவில் புரிந்துணர்வின்மையும் குறைந்த நல்லிணக்கமும் காணப்படும்.

நிதிநிலைமை சிறப்பாக காணப்படாது. கூடுதல் செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

இன்று நீங்கள் கால் வலியால் அவதிப்பட நேரலாம். உடற்பயிற்சி மேற்கொள்வதன் மூலம் சிறந்த பலன் காணலாம்.




உங்கள் செயல்களை சுமுகமாக மேற்கொள்ள நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டியது அவசியம். நீங்கள் நம்பிக்கை இழக்க நேரலாம். நீங்கள் உங்கள் தன்னம்பிக்கையை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். சக பணியாளர்களுடன் கவனமாக உறவாட வேண்டும்.

உங்கள் துணையுடன் நல்ல உறவை வளர்த்துக் கொள்ள முயல வேண்டும். உங்கள் துணையுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது.

நிதி நிலைமை சீராக இருக்காது. இன்று உங்கள் நிதிநிலைமையை பராமரிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

கண் எரிச்சல் ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது. மருத்துவரிடம் சென்று கண் பரிசோதனை மேற்கொள்வது சிறந்தது.




இன்று நீங்கள் உங்கள் உண்மையான ஆற்றலை அறிந்து கொள்வீர்கள். உங்களின் தகவல் தொடர்பு திறமைக்கான பாராட்டுப் பெறுவீர்கள்.

நீங்கள் திறமையாகப் பணியாற்றுவீர்கள். உங்களிடம் காணப்படும் உறுதி உங்கள் வெற்றிக்கு உதவும்.

இன்று உங்கள் துணையுடன் நல்லுறவு கொள்வீர்கள். உங்கள் நடத்தையின் மூலம் உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள்.

நிதி நிலைமை சிறப்பாக இருக்கும். இன்று உங்களிடம் அதிக பணம் காணப்படும்.நீங்கள் பணத்தை சிறப்பாக கையாள்வீர்கள்.

இன்று பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களின் நம்பிக்கையான மனநிலை காரணமாக நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று உங்கள் அணுகுமுறையில் உறுதி வேண்டியது அவசியம்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். அது உங்களுக்கு கவலை அளிக்கும். நீங்கள் பணிகளை திட்டமிட்டு முறையாக மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. வாக்குவாதங்கள் நிகழ வாய்ப்புள்ளது.

இன்று நிதி வளர்ச்சி காண சிறப்பான நாள் அல்ல. நீங்கள் செலவுகளை கவனமாகக் கையாள வேண்டும்.

உங்கள் தாயின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். இவ்வாறு எதிர்பாராத செலவுகள் ஏற்படும்.








# பாடசாலைகளுக்கிடையிலான கூடைந்தாட்டத்தில் சம்பியனானது கொழும்பு டீ.எஸ்.சேனநாயக்க கல்லூரி

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

இலங்கை பாடசாலைகள் கூடைப்பந்தாட்டச் சங்கம் நடாத்திய அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான 20 வயதுப் பிரிவு கூடைப்பந்தாட்டப் போட்டியில் கொழும்பு டீ.எஸ். சேனநாயக்க கல்லூரி சம்பியனாகியுள்ளது.

இப்போட்டியின் ஆரம்ப சுற்றுகளில், கொழும்பு ஆனந்தாக் கல்லூரியை 74-55 என்ற புள்ளிகள் அடிப்படையிலும், ஆசிய சர்வதேச பாடசாலையை 74-44 என்ற புள்ளிகள் அடிப்படையிலும், வத்தளை புனித ஜோஸப் கல்லூரியை 74-51 என்ற புள்ளிகள் அடிப்படையிலும், கொழும்பு உவெஸ்லி கல்லூரியை 84-44 என்ற புள்ளிகள் அடிப்படையிலும் கொழும்பு டீ.எஸ்.சேனநாயக்க கல்லூரி வெற்றிபெற்றது.

பின்னர் காலிறுதிப் போட்டியில் கல்கிசை புனித தோமஸ் கல்லூரியை 64-43 என்ற புள்ளிகள் அடிப்படையிலும், அரையிறுதிப் போட்டியில் கொழும்பு றோயல் கல்லூரியை 70-55 என்ற புள்ளிகள் அடிப்படையிலும் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்குத் தகுதிபெற்றது.

இறுதிப் போட்டியில் கொழும்பு புனித பீற்றர்ஸ் கல்லூரியை எதிர்கொண்ட கொழும்பு டீ.எஸ்.சேனநாயக்க கல்லூரி, 71-58 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று 15 வருடங்களின் பின்னர் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

